1981 ஏப்ரல் 22]

மங்களபுரம் பஞ்சாயத்துக்கருகிலுள்ள மலையில் கிடைக்கும் வெள்ளைக் கற்கள்.

*வினா எண் 849—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட நாமகிரிப் பேட்டை ஒன்றியத்திலுள்ள மங்களபுரம் பஞ்சாயத்து அருகில் உள்ள மலையில் வெள்ளைக்கல் நிறைய உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இங்கு அரசு தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) இராசபுரம் வட்டம் நாரைக் கிணறு வரையறுக்கப் பட்ட வனப்பகுதியில் "நொனாக்கரடு" பகுதியிலும், மங்கள புரம் வருவாய் கிராமத்தில் "மொட்டைக்கரடு" பகுதியிலும் சில திட்டுக்களாக (Patches) மாக்னசைட் (Magnesite) (வெள் ளைக்கல்) காணப்படுகிறது.

(ஆ) இங்கு மாக்னசைட் அமைப்புகள் மிகச் சிறிய அளவில் உள்ளதால் அவைகளை ஆதாரமாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்க இயலாது.

பெரியகுளம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 850—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவப்படும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS